தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-5-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் 5ஆம் ஆண்டு வேளாண் பட்டதாரி மாணவர்களுக்கான மாநாடு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூரில் 5ஆம் ஆண்டு வேளாண் பட்டதாரி மாணவர்களுக்கான மாநாடு ''வேளாண்மையை வருங்காலத்திற்கேற்ப மாற்றுதல்'' என்ற தலைப்பில் மாணவர்களின் பல்வேறு திறமைகளை ஊக்குவிப்பதற்காக மே 2017, 4 மற்றும் 5 தேதிகளில் இரண்டு நாட்களுக்கு நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. இராமசாமி முன்னிலை வகித்து தலைமையுரை ஆற்றினார். சென்னை தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். மு. பாஸ்கரன் அவர்கள் மாநாட்டை துவக்கி வைத்து மாநாட்டு கட்டுரைப்புத்தகத்தை வெளியிட்டார். மாணவர் பிரதிநிதி, செல்வி. க.நிஷா பிரதீபா மூன்றாம் ஆண்டு முனைவர் பட்டப்படிப்பு மாணவி அனைவரையும் வரவேற்க, முதுநிலை படிப்பு முதன்மையர் முனைவர். து. சுதாகர் அறிமுக உரையாற்றினார்.

மேலும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர். ச. மகிமைராஜா, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர். செ. திவாகர் துரைராஜ், தோட்டக்கலைத்துறை மற்றும் ஆராய்ச்சி நிலைய முதன்மையர் முனைவர். எம்.ஜவஹர்லால் மற்றும் தேர்வு கட்டுப்பாட்டு ஆணையர் முனைவர். கி. இளமுருகு அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள்.

முதுநிலை மாணவர்களால் நடத்தப்படும் இந்த மாநாட்டில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், கேரளா, கர்நாடகா, ஒரிசா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தார்கள்.

இறுதியாக மாணவ பிரதிநிதி செல்வன். ஜெ.ஜிஜி ஆலன் இரண்டாம் ஆண்டு முனைவர் பட்டப்படிப்பு மாணவர் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்